**சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்**

**முன்னிலை : திரு. M. சிவாஜி செல்லையா, L.L.M.,**
**சார்பு நீதிபதி, உத்தமபாளையம்.**

**2026 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 03 ம் நாள் திங்கட்கிழமை**

**(பழைய எண்)**
**குடும்பநல நீதிமன்றம் தேனி,**
**<u>இந்து திருமண முதலேற்பு மனு எண்.285/2025</u>**
**(புதிய எண்)**
**சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்**
**<u>இந்து திருமண முதலேற்பு மனு எண்.259/2025</u>**
**<u>(CNR No.TNTH050008342025)</u>**

மணிமேகலை .... **மனுதாரர்**

/எதிர்/

பாலமுருகன் .... **எதிர்மனுதார்**

இம்மனுவானது ஆரம்பத்தில் குடும்பநல நீதிமன்றத்தில் HMOP.No.285/2025 என எண்ணிடப்பட்டு, கடந்த 30.04.2025 ம் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. அதன்பின்னிட்டு, கடந்த 17.10.2025 ம் தேதியன்று குடும்பநல நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட Territoraial Jurisdiction(இடவரம்பு அதிகாரம்) உத்தரவின் அடிப்படையில் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இந்நீதிமன்றத்தில் HMOP.No.252/2025 என எண்ணிடப்பட்டு, கடந்த 23.10.2025 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பு 16.07.2026 ம் தேதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.ஸ்ரீநித்யா, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. R.உமாபதி, B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைக்கு கேட்பு நல்கியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான:–

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 22.02.2009 ம் தேதி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து, இந்து திருமணச் சட்டம் 13(1)(ia) பிரிவுகளின் கீழ் விவாகரத்து பரிகாரம் வழங்கக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரரின் மனுவின் சுருக்கம்:**

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 22.02.2009 ம் தேதியன்று அனுமந்தன்பட்டி JJ திருமண மஹாலில் பெரியோர்கள் முன்னிலையில் இரு வீட்டார் சம்மதத்துடன் நிச்சயிக்கப்பட்ட திருமணம் நடைபெற்றது என்றும், மனுதாரரும், எதிர்மனுதாரரும் திருப்பூரில் டெய்லர் வேலை பார்த்து வந்தார்கள் என்றும், மனுதாரரும், எதிர்மனுதாரரும் திருமணம் முடிந்த பின் 5 வருடங்கள் எதிர்மனுதாரர் இல்லத்தில் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தனர் என்றும், திருமண வாழ்வின் பயனாக கடந்த 28.01.2016 ம் தேதியன்று பாலதர்ஷினி என்ற மகள் பிறந்தார் என்றும், எதிர்மனுதாரரின் அக்கா கவிதாவால் தான் எதிர்மனுதாரருக்கும், மனுதாரருக்குமிடையே பிரச்சனை ஏற்பட்டது என்றும், எதிர்மனுதாரர் தான் வாங்கும்சம்பளத்தில், எதிர்மனுதாரரின் அக்கா மகள் கல்யாண செலவிற்காக வாங்கிய ரூ.5,00,000/-ம் கடனை எதிர்மனுதாரர் அடைத்துக்கொண்டு, குடும்ப செலவுகளுக்கும் பணம் கொடுப்பதில்லை, குழந்தைக்கு தேவையான எதையும் செய்வதில்லை. மேலும் மனுதாரரை அடிக்கடி சந்தேகப்படுவதும், தரக்குறைவாக பேசி மனுதாரரை நிம்மதியாக வாழ விடாமல் மன உளைச்சலுக்கு ஆளாக்கியுள்ளார், இவ்வாறு மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்குமிடையே பல தொடர் பிரச்சனைகள் ஏற்பட்டு அவர்களுக்குள் கருத்துவேறுபாடு ஏற்பட்டது என்றும், எனவே, இனிமேலும் மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழும் நிலை ஏற்படாது என தோன்றிய காரணத்தால் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்க கோரி மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**3. எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் :-**

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 22.02.2009 ம் தேதியன்று அனுமந்தன்பட்டி JJ திருமண மஹாலில் பெரியோர்கள் முன்னிலையில் இரு

வீட்டார் சம்மதத்துடன் நிச்சயிக்கப்பட்ட திருமணம் நடைபெற்றது என்பதும், மனுதாரரும், எதிர்மனுதாரரும் திருப்பூரில் டெய்லர் வேலை பார்த்து வந்தார்கள் என்பதும், மனுதாரரும், எதிர்மனுதாரரும் திருமணம் முடிந்த பின் 5 வருடங்கள் எதிர்மனுதாரர் இல்லத்தில் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தனர் என்பதும், திருமண வாழ்வின் பயனாக கடந்த 28.01.2016ம் தேதியன்று பாலதர்ஷினி என்ற மகள் பிறந்தார் என்பதும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அக்கா மகளான சந்தியா என்பவருக்கு தாய்மாமன் என்ற முறையில் சந்தியாவின் திருமணத்திற்காக நகை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதால் மனுதாரருடன், எதிர்மனுதாரர் கலந்து ஆலோசித்து சந்தியாவிற்கு 2 பவுன் தங்க நடை மட்டுமே எதிர்மனுதாரர் அணிவித்தார் என்றும், மேலும், எதிர்மனுதாரர் , மனுதாரர் வசம் சம்பளத்தினை கொடுத்து விடுவதால், அனைத்து செலவுகளையும் மனுதாரரே செய்து வந்தார் என்றும், மனுதாரர் தன்னுடைய பெற்றோர் பேச்சைக் கேட்டுக்கொண்டு எதிர்மனுதாரருடன் அடிக்கடி சண்டைபோட்டு வந்ததால், அவர்களுக்குள் தொடர் பிரச்சனைகள் ஏற்பட்டு கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்றும், இருப்பினும், எதிர்மனுதாரர் தனது மனைவி மற்றும் மகளின் எதிர்கால வாழ்க்கையை கருத்திற்கொண்டு, சேர்ந்து வாழத்தயாராக இருப்பதாகவும், எனவே மனுதாரர் விவாகரத்து கோரி தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர்மனுதாரர் கேட்டுக்கொள்கிறார்.

**4. சாட்சியம் :**

இம்மனுவில் மனுதாரர் மணிமேகலை ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் பாலமுருகன் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக எ.ம.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், மனுதாரர் விவாகரத்து கோரி தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்,

**6. தீர்வு :**

கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், உபயமனுதாரர்களுக்கு கடந்த 22.02.2009ம் தேதியன்று அனுமந்தன்பட்டி JJ திருமண மஹாலில் பெரியோர்கள் முன்னிலையில் நிச்சயிக்கப்பட்ட திருமணம்

நடைபெற்றது என்றும், திருமண வாழ்வின் பயனாக கடந்த 28.01.2016 ம் தேதியன்று பாலதர்ஷினி என்ற மகள் பிறந்தார் என்றும், உபயமனுதாரர்களுக்கும் திருமணத்திற்கு பின்னர் தொடர் பிரச்சனைகள் ஏற்பட்டு, பலமுறை சேர்ந்து வாழ பேசியும் எவ்வித சமரசமும் எட்டப்படவில்லை என்பதால் இனிமேலும் சேர்ந்து வாழ வழியில்லை என்பதாலும் இந்த விவாகரத்து மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிக்க வேண்டுமென வாதிட்டார்.

**7.** இதற்கு மாறாக, கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், உபயமனுதாரர்களுக்கு கடந்த 22.02.2009 ம் தேதியன்று திருமணம் நடந்து, திருமண வாழ்வின் பயனாக பாலதர்ஷிணி என்ற பெண்குழந்தை பிறந்தது மட்டும் ஒப்புக்கொள்ளப்படுகிறது என்றும், அதைத்தவிர மனுவில் மனுதாரர், எதிர்மனுதாரருக்கு சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றும், எதிர்மனுதாரர் தனது மகளுக்காக பழைய பிரச்சனைகளை எல்லாம் மறந்து, சேர்ந்து வாழ தயாராக இருப்பதால் மனுதாரர் விவாகரத்து கோரி தாக்கல் செய்துள்ள மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென வாதிட்டார்.

**8.** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது மற்றும் வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த மனுக்களில் இரு தரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்ட வழக்கு என்பது, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 22.02.2009 ம் தேதியன்று அனுமந்தன்பட்டி JJ திருமண மஹாலில் பெரியோர்கள் முன்னிலையில் இரு வீட்டார் சம்மதத்துடன் நிச்சயிக்கப்பட்ட திருமணம் நடைபெற்றது என்பதும், அவர்கள் திருப்பூரில் டெய்லர் வேலை பார்த்து வந்தார்கள் என்பதும், திருமண வாழ்வின் பயனாக கடந்த 28.01.2016 ம் தேதியன்று பாலதர்ஷினி என்ற மகள் பிறந்தார் என்பதும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. இதை தவிர மனுதாரர் மனுவில் கூறியுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர் இந்து திருமணச் சட்டம் பிரிவு 13 (1) (i–a) cruelty என்ற பிரிவின் கீழ் தாக்கல் செய்துள்ள விவாகரத்து பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பது குறித்து தீர்வு காண வழக்காவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

**9.** இந்த விவாகரத்து மனுவை மனுதாரர் 'Cruelty' என்ற மேற்படி காரணத்தின் அடிப்படையில் விவாகரத்து கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி மனுவில் சொல்லியுள்ள குற்றச்சாட்டுகள் எதிர்மனுதாரர் தரப்பில் முற்றிலுமாக மறுக்கப்பட்டு, சேர்ந்து வாழ வேண்டும் என எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**10.** இதுகுறித்து மாண்புமிகு உச்சநீதிமன்றம் கீழ்க்கண்ட வரையறைகளின் கீழ் ஒரு செயல் தொடர்ந்து நடைபெற்றால் அது Cruelty என்ற பதத்தின்கீழ் வரும் என Hon'ble Supreme court in its judgment reported in **Bankaj Mahajan vs. Dimple @ Kajal in 2011 (12) SCC page 1** Hon'ble apex court held the following instances of cruelty are as follows :

(i) Giving repeated threats to commit suicide and even trying to commit suicide on one occasion by jumping from the terrace.
(ii) Pushing the appellant from the staircase resulting into fracture of his right forearm
(iii) Slapping the appellant and assaulting him
(iv) Misbehaving with the colleagues and relatives of the appellant causing humiliation and embarrassment to him.
(v) Not attending to household chores and not even making food for the appellant. Leaving him to fend for himself.
(vi) Not taking care of the baby
(vii) Insulting the parents of the appellant and misbehaving with them.
(viii) Forcing the appellant to live separately from his parents.
(ix) Causing nuisance to the landlord's family of the appellant, causing the said landlord to force the appellant to vacate the premises.
(x) Repeated fits of insanity, abnormal behavior causing great mental tension to the appellant.
(xi) Always quarreling with the appellant and abusing him.
(xii) Always behaving in an abnormal manner and doing weird acts causing great mental cruelty to the appellant என மேற்படி 12 காரணங்களில் ஏதாவதொரு காரணம் இருந்தால் மனக்கொடுமை Cruelty என்ற பதத்தின்கீழ் நீதிமன்றம் விவாகரத்து வழங்கலாம் என முன்தீர்வு பதிந்துள்ள நிலையில், இந்த வழக்கில் மனுதாரர் Cruelty என்ற காரணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதா? என்பது குறித்து தீர்வு காண வழக்காவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

**11.** இந்த வழக்கு இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள் தரப்பில் திறந்த நீதிமன்றத்தில் இனிமேல் சேர்ந்து வாழ்வதற்கு வழி இல்லை என்றும், நீதிமன்றம் மூலமாக விவாகரத்து பெறுவது தான் இருவருடைய வாழ்க்கைக்கு சரியானதாக இருக்கும் என எடுத்துரைக்கப்பட்டது. மேற்படி மனுதாரர் விவாகரத்து

வேண்டுமென கோரியுள்ள மனு பரிகாரத்தை, எதிர்மனுதாரர் தரப்பில் மறுத்து குறுக்கு விசாரணை செய்தபோதிலும், இறுதியாக மனுதாரர் தரப்பில் சேர்ந்து வாழ வழியே இல்லை என அறுதியிட்டு சாட்சியமளித்த பின்னர், எதிர்மனுதாரரும் விவாகரத்து கொடுக்க சம்மதிப்பதாக ஒப்புக்கொண்டார். அதை உறுதிப்படுத்தும் வகையில், மனுவின் மனுதாரர் மணிமேகலை ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, கடந்த 16.07.2026 ம் தேதியன்று தனது நீதிமன்ற சாட்சியத்தில்,

" என் கணவர் பழைய பிரச்சனைகளை எல்லாம் மறந்து என் காலில் விழுந்து கூட மன்னிப்பு கேட்டு சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார் என்றால் நான் சேர்ந்து வாழ தயாராக இல்லை. என் குழந்தையை நான் தான் பொறுப்பேற்று கொண்டு அவருக்கு கல்வி, திருமணம் போன்ற அனைத்து செலவுகளையும் நானே செய்து கொள்கிறேனா என்றால் அந்த செலவுகளை என் கணவர் செய்யவேண்டும். என் மகளை என் கணவரிடம் ஒப்படைத்தால் தான் அவர் குழந்தைக்கு வேண்டிய அனைத்து செலவுகளையும் செய்வார் என்றால் நான் குழந்தையை ஒப்படைக்க முடியாது. என்னை நானே பராமரித்து கொள்கிறேன். என் மகள் திண்டுக்கல் பஞ்சம்பட்டியில் உள்ள அகஸ்தினார் மேல்நிலைப்பள்ளியில் 6 ம் வகுப்பு படிக்கிறார். அவர் அங்கு பள்ளி விடுதியில் தங்கி படித்து வருகிறார் ஒவ்வொரு ஞாயிற்று கிழமையும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை பார்க்கும் நேரத்தில் என் கணவர் என் மகளை சென்று பார்ப்பதற்கு எனக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது. என் கணவர் கல்வி கட்டணத்தை பாதியை செலுத்த தயாராக இருந்தால் என் மகளை பள்ளியிலோ விடுதியிலோ சென்று பார்ப்பதற்கு எனக்கு ஆட்சேபனை கிடையாது. என் மகள் மேல்வகுப்பு கல்லூரியில் முடிக்கும் வரை என் மகளை பார்ப்பதற்கு எனக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது. நான் என் கணவருக்கு எந்த சிரமும் கொடுக்காமல் இருந்தால் அவர் விவாகரத்து கொடுக்க சம்மதிக்கிறார் என்றால் நான் அவர் விவாகரத்துக்கு சம்மதிக்கும் பட்சத்தில் அவரை நான் எந்த தொந்தரவும் செய்யமாட்டேன் நான் சேர்ந்து வாழ மாட்டேன் என பிடிவாதமாக மறுத்து வருகிறேன் என்பதாலும், என் கணவருக்கு சேர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும், நான்

மறுப்பதால் அவர் விவாகரத்து கொடுக்க சம்மதிக்கிறார் என்றால் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**12.** அதேபோல், இம்மனுவின் எதிர்மனுதாரரான பாலமுருகன் என்பவர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தன்னுடைய சாட்சியத்தில்,

" என்னுடைய மனைவி பிடிவாதமாக சேர்ந்து வாழ மறுப்பதால் நான் விவாகரத்து கொடுக்க சம்மதிக்கிறேன் என்றால் சரிதான். என் மகளை நான் பார்க்க வேண்டும். என் மகளுக்கு பராமரிப்பு செலவை நான் பாதியாக ஏற்றுக்கொள்கிறேன்" என சாட்சியமளித்துள்ளார்.

**13.** ஆகையால், மேற்படி உபயமனுதாரர்களின் வாய்மொழி சாட்சியத்தை பரிசீலனை செய்யும் போது, அவர்கள் இனிமேல் சேர்ந்து வாழ வழி இல்லை என்பதும், திருமணம் நடந்த 22.02.2009 ம் தேதிக்குப்பின்னர் கடந்த ஒரு வருடகாலமாக அவர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டு பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்பது வழக்காவணங்களை பரிசீலனை செய்யும் போது தெரிய வருகிறது.

**14.** மேலும், எதிர்மனுதாரர் தனது வாய்மொழி சாட்சியம் மூலம் விவாகரத்து கொடுக்க சம்மதித்துள்ள நிலையில், அவர் மகளின் பராமரிப்பு செலவை பாதியாக ஏற்றுக்கொள்வதாகவும் சம்மதித்துள்ளார். அதேபோல் மனுதாரர் தன் மகள் திண்டுக்கல் பஞ்சம்பட்டியில் உள்ள அகஸ்தினார் மேல்நிலைப்பள்ளியில் பள்ளி விடுதியில் தங்கி 6ம் வகுப்பு படித்து வருகிறார் என்றும், ஒவ்வொரு ஞாயிற்று கிழமையும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை பார்வையாளர் பார்க்கும் நேரத்தில் தன் கணவர் கல்வி கட்டணத்தை பாதியை செலுத்த தயாராக இருந்தால் என் மகளை பள்ளியிலோ விடுதியிலோ சென்று பார்ப்பதற்கு எனக்கு ஆட்சேபனை கிடையாது எனக்கூறியுள்ள நிலையில் இம்மனுவில் தீர்வு காண வேண்டிய பிரச்சனை எதுவும் இல்லை என்பது தெரிய வருகிறது.

**15.** எனவே, உபயமனுதாரர்கள் கடந்த ஒரு வருடங்களுக்கும்மேலாக பிரிந்து வாழ்ந்து வருவதை கருத்தில் கொண்டும், மனுதாரர் சேர்ந்து வாழ மறுத்துவிட்ட நிலையிலும், உபய மனுதாரர்களுக்கும் கடந்த 22.02.2009 ல் கடந்த திருமண பந்தத்தை ரத்து செய்து விவாகரத்து பரிகாரம் வழங்குவது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் தீர்மானித்து இந்த மனு பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**16. முடிவாக, இம்மனு கீழ்க்கண்டவாறு அனுமதிக்கப்படுகிறது.**

**(i)** மனுதாரர் இந்து திருமணச் சட்டம் பிரிவு 13(1)(i–a)ன் கீழ் விவாகரத்து கோரி தாக்கல் செய்த மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 22.02.2009 அன்று நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து (Divorce) வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**(ii)** திண்டுக்கல் மாவட்டம் பஞ்சம்பட்டியில் உள்ள அகஸ்தினார் மேல்நிலைப்பள்ளியில், பள்ளி விடுதியில் தங்கி 6ம் வகுப்பு படித்து வரும் எதிர்மனுதாரரின் மகள் பாலதர்ஷினியை ஒவ்வொரு ஞாயிற்று கிழமையும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை பார்வையாளர் பார்க்கும் நேரத்தில் எதிர்மனுதாரர் தன் மகளை பார்ப்பதற்கு மனுதாரர் சம்மதிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

**(III)** எதிர்மனுதாரர், அவரது மகள் பாலதர்ஷினியின் கல்வி கட்டணத்தில் பாதியை செலுத்த வேண்டும் என ஒப்புக்கொண்டுள்ள நிலையில் அவரது மகளின் எதிர்கால நலன் கருதி, அவருடைய கல்வி கட்டணத்தில் பாதியை பள்ளியிலோ அல்லது மனுதாரரின் வங்கி கணக்கிலோ, பள்ளி கட்டணம் செலுத்த வேண்டிய காலகட்டத்தில் ஆங்கில மாதம் 10ம் தேதிக்குள் கொடுக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

**(iv)** செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரி பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 03.08.2026ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH

**சார்பு நீதிபதி,**

**உத்தமபாளையம்.**

<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u> :

ம.சா.1 ... மணிமேகலை – மனுதாரர்

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :–</u>

ம.சா.ஆ.1 ... திருமண புகைப்படம்

ம.சா.ஆ.2 ... பாலதர்ஷினியின் பிறப்பு சான்றிதழ்

ம.சா.ஆ.3 ... பாலதர்ஷினியின் ஆதார் அட்டையின் நகல்

ம.சா.ஆ.4 ... ம.சா.1ன் ஆதார் அட்டையின் நகல்

ம.சா.ஆ.5 ... திருமண அழைப்பிதழ்

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி :–</u>

எ.ம.சா.1 ... பாலமுருகன் – எதிர்மனுதாரர்

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :</u>

எ.ம.சா.ஆ.1 ... எ.ம.சா.1 ன் ஆதார் அடையாள அட்டையின் நகல்

M SHIVAJI CHELLIAH Digitally signed by M SHIVAJI CHELLIAH

**சார்பு நீதிபதி,**

**உத்தமபாளையம்.**

Sub Court, UPM
O.P.259/2025
Fair Order
Dated.03.08.2026

சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

முன்னிலை : திரு. M. சிவாஜி செல்லையா, L.L.M.,
சார்பு நீதிபதி, உத்தமபாளையம்.

2026 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 03 ம் நாள் திங்கட்கிழமை

**(பழைய எண்)**
**குடும்பநல நீதிமன்றம் தேனி,**
**இந்து திருமண முதலேற்பு மனு எண்.285/2025**
**(புதிய எண்)**
**சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்**
**இந்து திருமண முதலேற்பு மனு எண்.259/2025**
**(CNR No.TNTH050008342025)**

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், காமனூர் ஊராட்சி, கானல்காடு அஞ்சல், கதவு எண்.5-98A என்ற எண்ணில் அண்ணா தெருவில் வசிக்கும் அழகேசன் அவர்களின் மகளான இந்து சுமார் 36 வயதுள்ள மணிமேகலை

**.... மனுதாரர்**

/எதிர்/

தேனி மாவட்டம், தேனி வட்டம், அனுமந்தன்பட்டி, அல்லா கோவில் தெரு, கதவு எண்.8/2/16/1 என்ற முகவரியில் வசிக்கும் ராஜாமணி அவர்களின் மகனான இந்து சுமார் 45 வயதுள்ள பாலமுருகன்

**.... எதிர்மனுதாரர்**

மனு தாக்கலான நாள் :23.10.2025

நீதிமன்ற முத்திரைக் கட்டணம் : ரூ.50/- செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனுவானது மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 22.02.2009 ம் தேதி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து, இந்து திருமணச் சட்டம் 13(1)(ia) பிரிவுகளின் கீழ் விவாகரத்து பரிகாரம் வழங்கக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனுவானது ஆரம்பத்தில் குடும்பநல நீதிமன்றத்தில் HMOP.No.285/2025 என எண்ணிடப்பட்டு, கடந்த 30.04.2025ம் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. அதன்பின்னிட்டு, கடந்த 17.10.2025ம் தேதியன்று குடும்பநல நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட Territoraial Jurisdiction(இடவரம்பு அதிகாரம்) உத்தரவின் அடிப்படையில் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இந்நீதிமன்றத்தில் HMOP.No.252/2025 என எண்ணிடப்பட்டு, கடந்த 23.10.2025ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பு 16.07.2026ம் தேதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.ஸ்ரீநித்யா, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. R.உமாபதி, B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைக்கு கேட்பு நல்கியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான:–

**நிறைவேற்றாணை**

**(i)** இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**(ii)** மனுதாரர் இந்து திருமணச் சட்டம் பிரிவு 13(1)(i–a)ன் கீழ் விவாகரத்து கோரி தாக்கல் செய்த மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 22.02.2009 அன்று நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து (Divorce) வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**(iii)** திண்டுக்கல் மாவட்டம் பஞ்சம்பட்டியில் உள்ள அகஸ்தினார் மேல்நிலைப்பள்ளியில், பள்ளி விடுதியில் தங்கி 6ம் வகுப்பு படித்து வரும் எதிர்மனுதாரரின் மகள் பாலதர்ஷினியை ஒவ்வொரு ஞாயிற்று கிழமையும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை பார்வையாளர் பார்க்கும் நேரத்தில் எதிர்மனுதாரர் தன் மகளை பார்ப்பதற்கு மனுதாரர் சம்மதிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

**(Iv)** எதிர்மனுதாரர், அவரது மகள் பாலதர்ஷினியின் கல்வி கட்டணத்தில் பாதியை செலுத்த வேண்டும் என ஒப்புக்கொண்டுள்ள நிலையில் அவரது மகளின் எதிர்கால நலன் கருதி, அவருடைய கல்வி கட்டணத்தில் பாதியை பள்ளியிலோ அல்லது மனுதாரரின் வங்கி கணக்கிலோ, பள்ளிக்கட்டணம் செலுத்த வேண்டிய

காலக்கட்டத்தில் ஆங்கில மாதம் 10ம் தேதிக்குள் கொடுக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

**(v)** செலவு தொகை இல்லை.

<u>செலவு தொகை பட்டியல் : இரு தரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை.</u>

2026ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 03ம் நாள் எனது கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

M SHIVAJI CHELLIAH

Digitally signed by M SHIVAJI CHELLIAH

**சார்பு நீதிபதி,**

**உத்தமபாளையம்.**